


# கோலாலம்பூரில் 8,000 மடானி குடியிருப்பு வீடுகள் நிர்மாணிப்பு

கோலாலம்பூர், மார்ச் 20 –

இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் கோலாலம்பூரில் 8,000 மடானி குடியிருப்பு வீடுகள் உருவாக்குவதை தனது தரப்பு இலக்காகக் கொண்டுள்ளது என்று பிரதமர் துறை அமைச்சர் டாக்டர் ஜலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

மேலும், வெ.200,000 மலிவு விலையில் உள்ள குடியிருப்பு குறைந்த அல்லது நடுத்தர வருவாய் பிரிவினருக்குப் பயனளிக்கும் என்றும் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் கட்டப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விழாவில் தகவல் தொடர்பு அமைச்சர் ஃபஹ்மி ஃபட்சில், கோலாலம்பூர் நகராண்மைக் கழக நிர்வாக இயக்குநர் டத்தோ கமருல்ஜமான் மாட் சாலே ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, புத்ரா ஜெயாவில் 10,000 மடானி குடியிருப்பு வீடுகள், ரெஸிடென்சி விலாயா வகை வீடுகள் இந்த ஆண்டு தொடங்கி 2027இல் கட்டி முடிக்கப்படும் என ஊடகங்கள் தெரிவித்தன.